நிலை ஏற்படுமானால் அரசாங்கம் வாங்காமல் யார் வேண்டு மானாலும் வாங்கிக் கொள்ளலாம் என்று சொல்வோமேயானால் இதை விட அதிகம்தான் ஏற்பட முடியும். ஆகவே இதை ஆராய்ந்து பார்த்து ஒரு நியாயமான அளவுக்கு அவர்களுக்கு ஊதியம் கொடுப்பதற்கு என்ன வழிகாண முடியுமோ அதைக் காண அரசு ஏற்பாடு செய்யும்.

குமரி மாவட்டத்தில் தென்னை நாரிலிருந்து பொருள்கள் தயாரிக்கும் பயிற்சி நிலையம்.

*வினா எண். 44—திரு. டி. மணி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குமரி மாவட்டத்தில் தென்னை நாரிலிருந்து கயிறு திரிக்கவும், பாய் பின்னுவதற்கும், இரண்டு நூல் இழைகளிலான முறுக்கு நார்கள் தயார் செய்வதற்குமான பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளனவா ?

(ஆ) எத்தனை பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட் டுள்ளன ?

(இ) எந்த எந்த இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன ?

(ஈ) அந்த பயிற்சி நிலையங்களில் கயிறு டெக்னாலஜி பயிற்சி பெற்றவர்கள்தான் நியமனம் செய்யப்பட்டுள்ளார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) இல்லை.

(ஆ, இ, & ஈ) மற்ற வினாக்களுக்கு இடமில்லை.

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியா குமரி மாவட்டத்தில் கயிறு பயிற்சி நிலையங்களில் எத்தனை மாணவர்கள் படிக்கிறார்கள் ? அவர்களுக்கு உதவித் தொகை எவ்வளவு கொடுக்கப்படுகிறது ? அந்த உதவித் தொகை அதிகரிக்கப்படுமா ? அந்தக் கயிறு பயிற்சி நிலையங்களில் டெக்னாலஜி படிக்காதவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கொடுக்கின்ற பயிற்சி முறை சரியாக இல்லை. அதனால் அங்கே உற்பத்தி செய்யப்படும் கயிறுகளுக்கு சரியான மார்க் கெட்டு இல்லை என்பது தெரியுமா ? அங்கே டெக்னாலஜி படித்தவர்களை நியமிக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

1981 ஜனவரி 27]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்னை நாரிலிருந்து கயிறு திரிக்கவும், பாய் பின்னுவதற்கும் இரண்டு நூல் இழைகளினாலான முறுக்கு நார்கள் தயார் செய்வதற்குமான பயிற்சி நிலையங்கள் அரசினால் அமைக்கப்படவில்லை. ஆனால், ஒருங்கிணைந்த மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (ஐ.ஆர்.டி.பி.) 1979–80 ல் இரு பிரி கயிறு தயார் செய்யும் 17 தனியார் தொழிற்சாலைகள் மற்றும் இரண்டு கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக 300 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அப்படி பயிற்சி அளிக்கப்படுகின்ற அந்தப் பொறுப்பு தனியார் நிறுவனங்களிடமும் கூட்டுறவு சங்கங்களிடமும் இருக்கிற காரணத்தால், பயிற்சியாளர்களை அந்தந்த உரிமையாளர்களே நியமித்துக் கொள்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 9–20].

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பயிற்சி நிலையத்தில் காயர் டெக்னாலஜி படித்தவர்கள் இல்லாத காரணத்தால், அங்கே பயிற்சி பெற்றவர்கள் உற்பத்தி செய்யும் முறுக்கு நூல்கள் போன்ற பொருள்களை அந்த மாவட்டத்தில் இருக்கும் அம்மாண்டிவிளையிலுள்ள டேக்புளோர் கம்பனி எடுக்க மறுக்கிறார்கள். அதற்குக் காரணம், அவைகள் தரக்குறைவாகவும், விலை அதிகமாகவும் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இந்த நிலையைப் போக்க கூட்டுறவுச் சங்கங்கள் வழியாக தேங்காய் மட்டைகளைச் சேகரித்து, நியாய விலையில் தொழிலாளர்களுக்கு வினியோகம் செய்தால், குமரி மாவட்டத்தில் இருக்கும் 10,000 தொழிலாளர்கள் மத்தியில் இருக்கும் நெருக்கடியைப் போக்க முடியும். அரசு அந்த வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் பற்றிய விவரங்கள் என்னிடத்தில் தற்போது இல்லை. ஆனால் அவர் சொன்ன கருத்துக்களை கவனத்தில் கொண்டு தக்க நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும்.

திரு. பொ. விஜயராகவன் : தலைவர் அவர்களே, தேங்காய் நாரிலிருந்து கயிறு தயாரிக்கும் இந்தத் தொழிலுக்கு மூலப் பொருளாக இருக்கும் தேங்காய் மட்டைகளை திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்குக் கொண்டு செல்லக் கூடாது என்று இந்த அரசு ஆணைப் பிறப்பித்து இருக்கிறது. இதனால் அங்கே அந்தத் தொழில் வளர்சிச்

பெறுவதற்கான வாய்ப்பு குறைந்து போகிறது. இதைக் கருத்தில் கொண்டு அந்தத் தடையை நீக்குவதற்கு இந்த அரசு உடனடியாக முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லாத காரணத்தால் அருள் கூர்ந்து உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவை நகரில் பால் வழங்கல்

***வினா எண். 45— திரு. கு. ரமணி :** மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை நகரத்திலுள்ள லட்சக்கணக்கான மக்களுக்கு நல்ல முறையில் பால் கிடைக்காத நெருக்கடி உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம். எனில் சென்னை நகரிலுள்ளது போல் அரசு பால் விநியோக நிறுவனம் ஒன்றை அமைக்க உத்தேசம் உண்டா?

(இ) கோவை நகர மக்கள் அனைவருக்கும் நிர்ணய விலையில் பால் சரிவர கிடைக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

(இ) கோவை மாநகர் பால் உற்பத்தியாளர் ஒன்றியம் மூலம் கோவை நகரின் பல்வேறு பகுதிகளிலும் தரமான பால் விநியோகம் தற்போது செய்யப்பட்டு வருகிறது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தரமான பால் கூட்டுறவு சங்கங்களின் மூலம் பல பகுதிகளில் விநியோகம் செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். கோவை நகரத்தில் இருக்கும்படியான பகுதிகளில்— இப்போது அண்மையில் புதிதாகச் சேர்க்கப்பட்ட பகுதிகளைப் பற்றி நான் சொல்லவில்லை—பழைய பகுதிகளிலேயே—5 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அவர்களில் 4—ல் ஒரு